**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 71** **நாள்: 23.06.2017**

## <u>பொதுசுகாதார கல்வித்துறை சார்பாக டெங்கு நோய்த்தடுப்பு மற்றும் தூய்மை இந்தியா திட்ட சிறப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது</u>

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக பள்ளிகள், கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள், குடிசைப்பகுதிகள், வியாபார நிறுவனங்கள், வணிக வளாகங்கள் மற்றும் மக்கள் பெரும்பாலாக கூடும் இடங்களில் டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட நோய்த்தடுப்பு மற்றும் தூய்மை இந்தியா திட்டம் குறித்து பல்வேறு விதமான விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் டெங்கு காய்ச்சல் சம்பந்தமாக தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்துமாறும் மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஸ்வச்சதா ஆப் என்ற செயலியை பயன்படுத்த அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதன் பேரில், மண்டலம்–5க்குட்பட்ட ஈ.வெ.ரா சாலையில் உள்ள அரசு கவின் கலைக் கல்லூரியில் பயிலும் சுமார் 300 மாணவ, மாணவியர்களுக்கு சுகாதார விழிப்புணர்வு மற்றும் தூய்மை இந்தியா திட்டம் குறித்து விழிப்புணர்வு நடத்தப்பட்டது. முகாமில் பெருநகர மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர். T.G. சீனிவாசன், அவர்கள் முறையாக 20 நொடிகள் தொடர்ந்து சோப்பு உபயோகித்து கைகழுவுவதினால் டைபாய்டு, வயிற்றுப்போக்கு, குடற்பூச்சிகள், பன்றிக்காய்ச்சல் போன்ற பல தொற்று நோய்கள் எவ்வாறு தடுக்கப்படுகின்றன என்பதை கைகழுவும் முறை பற்றிய செய்முறை விளக்கத்துடன் விளக்கினார். மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சகத்தால், தூய்மை இந்தியா திட்டம் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட ‘‘ஸ்வச்சதா செயலி’’ யை (Swachhta –Moud) எவ்வாறு பதிவிறக்கம் செய்வது என்பது குறித்து மாணவ, மாணவியர்களுக்கு ஸ்மார்ட் போன் மூலம் செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. ஸ்மார்ட் போன் வைத்திருந்த பெரும்பாலான மாணவ, மாணவிகள் ‘‘ஸ்வச்சதா செயலி’’யை உடன் பதிவிறக்கம் செய்தனர். மற்றவர்கள் ஓரிரு நாட்களுக்குள் பதிவிறக்கம் செய்வதாகவும் கூறினர் மற்றும் அனைவரும் மற்றவர்களுக்கும் இச்செயலியை பற்றி எடுத்து கூறி பதிவிறக்கம் செய்ய வைப்பதாகவும் உறுதி அளித்தனர்.

ஸ்வச்சதா செயலி மூலம்,

- குப்பை எடுக்கப்படாமல் இருத்தல்
- குப்பை ஊர்தி வராமல் இருத்தல்
- குப்பை தொட்டிகளில் குப்பை எடுக்கப்படாமல் இருத்தல்
- தெரு மற்றும் சாலைகளில் பெருக்காமல் இருத்தல்
- வீட்டு விலங்குகள் ஏதேனும் இறந்து எடுக்கப்படாமல் இருத்தல்
- பொதுக்கழிப்பறையில் தண்ணீர் வராமல் இருத்தல், விளக்குகள் எரியாமல் இருத்தல், கழிவு நீர் அடைப்பு, சுத்தம் இல்லாமல் இருத்தல்

போன்றவை குறித்து உடன் நடவடிக்கை எடுக்க, அதன் புகைப்படம் எடுத்து இச்செயலியின் வாயிலாக அனுப்புவதன் மூலம் உரிய கோட்ட மாநகராட்சி அலுவலருக்கு புகாரானது அனுப்பப்பட்டு, உடனடி தீர்வு காண முடியும் என்பது விளக்கப்பட்டது. மேலும், மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள், கொசுக்கள் உருவாகாமல் தடுக்கும் முறைகள், மட்கும் மற்றும் மட்காத குப்பைகள் என்று வகைப்படுத்தி அளிப்பதன் அவசியம், தூய்மை இந்தியா திட்டத்தின் நோக்கங்கள் முதலியன குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. டெங்கு காய்ச்சல் மற்றும் மட்கும், மட்காத குப்பை சம்பந்தமான துண்டு பிரசுரங்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டன. இறுதியில் டெங்கு தடுப்பு மற்றும் குப்பைகளை வகைப்பிரித்தல் உறுதிமொழியை அனைவரும் எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் P. மதியழகன், சுகாதார ஆய்வாளர் அலெக்ஸ் பாண்டி, துப்புரவு ஆய்வாளர் டில்லிபாபு மற்றும் ஆசிரிய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி**